2011 ஜனவரி 12]

ஆகவே, கடை எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கிற காரணத்தால், வட்ட வழங்கல் அலுவலகம் என்பது குறுகிய, இட நெருக்கடியான ஓர் இடத்திலே இருக்கின்றது. ஆகவே, அந்த அலுவலர்களாலேயும் அங்கு செயல்பட முடியாத நிலை இருக்கிறது என்ற காரணத்தினால் இரண்டு அலுவலகமாகப் பிரிப்பதோடு, அதற்குத் தேவையான கூடுதல் பணியாளர்களும், அதற்கென தனியாக வசதிகள் அடங்கிய ஒரு விரிவான கட்டடமும் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் உரிய ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற வட்டார வழங்கல் அலுவலகத்தை இரண்டாகப் பிரிப்பதைவிட அரசிலே இரண்டு வட்ட வழங்கல் அலுவலகங்களை துவக்கலாம் என்று ஒரு முடிவு செய்துவிட்ட காரணத்தினால், அதை விரைந்து செயல்படுத்தி இரண்டு அலுவலகங்களையும் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். இடங்களைப் பொறுத்தளவில் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நாங்கள் கேட்டு இருக்கிறோம். அரசு கட்டடங்கள் இருந்தால் அதிலே இதனைத் துவக்கலாம் அல்லது வாடகைக் கட்டடத்திலேயாவது துவக்கலாம் என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை சொல்லப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தத் தகவல் வந்தவுடனேயே புதிய வட்ட வழங்கல் அலுவலகமும் துவக்கப்படும், அலுவலகங்களும் இரண்டாக இருப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

27—

சுற்றுச்சுவர்

***115528—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 12

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தும்பலப்பட்டி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தும்பலப்பட்டி நடுநிலைப் பள்ளிக்கு 42 மீட்டர்கள் சுற்றுச்சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் இப்பள்ளிக்குச் சுற்றுச்சுவர் இந்தக் கல்வியாண்டில் கட்டி முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தும்பலப்பட்டி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்கப்படும் என்று கூறியுள்ளார்கள். அதோடு உடுமலைப் பகுதி, மடத்துக்குளம் பகுதி, குடிமங்கலம் பகுதி உள்ளடங்கிய பகுதியிலே உள்ள நடுநிலைப் பள்ளி, சின்னப்புதூர், பெருமாள்புதூர், குமரலிங்கம் கிழக்கு, பெரிய வட்டாரம், ரெட்டிப்பாளையம், கடத்தூர் புதூர், ஸ்ரீராம்பட்டினம், மலையாண்டிப்பட்டினம், காமராஜ் நகர், புங்கமுத்தூர், கணக்கம்பாளையத்தில் உள்ள ஜே.ஜே. நகர் போன்ற பகுதிகளிலும் உள்ள துவக்கப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவரைக் கட்டித் தர வேண்டும். ஊர்களையொட்டி பள்ளிகள் இருப்பதால் மிருகங்கள் வருகின்றன. வருகிற ஆண்டில் உரிய ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேல்நிலைப் பள்ளிகளான புதிதாகத் தொடங்கப்பட்ட பூலாங்கிணறு மேல்நிலைப் பள்ளி, குடிமங்கலம் மேல்நிலைப் பள்ளி, அதோடு உயர்நிலைப் பள்ளிகள் உள்ள சிவசக்தி காலனி, அமராவதி நகர், சோளமாதேவி, பெரியவாளபாடி ஆகிய பகுதிகளிலும், சுற்றுச்சுவர் சில இடங்களில் பாதி கட்டப்பட்டுள்ளது; பாதி கட்டாமல் உள்ளது. S.S.A. திட்டத்திலும், நபார்டு திட்டத்திலும் இப்போது கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

2011 ஜனவரி 12]

இதற்கு முன்னுரிமை கொடுத்து கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, குறிப்பாக மலைப் பகுதிகள், வனங்களை ஒட்டி இருக்கக்கூடிய பகுதிகள், அதேபோல போக்குவரத்து மிகுந்திருக்கக்கூடிய, சாலைகளை ஒட்டி இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு S.S.A. திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டு இப்போது சுற்றுச்சுவர் கட்டப்பட்டு வருகின்றது.

அதேபோல, நபார்டு வங்கித் திட்டத்தின்கீழே பள்ளிகளுக்கான வகுப்பறைகளைக் கட்டுகிறபோது 8-வது திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளக்கூடிய எல்லா பள்ளிகளுக்கும் சுற்றுச்சுவரையும் சேர்த்து கட்டுகின்ற பணியையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்தப் பள்ளிகளையும், வரக்கூடிய ஆண்டுகளிலே S.S.A. திட்டத்திலும், அதேபோல நபார்டு வங்கியினுடைய திட்டங்களின்கீழும் இணைத்து, R.M.S.A. திட்டத்தின்கீழும் அதிகமான நிதியுதவி நமக்கு வருவதால்—கடந்த ஆண்டு மட்டும் கோவை மாவட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிதி ஏறத்தாழ இரண்டரை கோடி ரூபாய்—திருப்பூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்படக்கூடிய காரணத்தினால் வரக்கூடிய ஆண்டுகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கக்கூடிய பள்ளிகளுக்கு முன்னுரிமை அளித்து அந்தப் பணிகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, துவக்கப் பள்ளி, ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே இப்போது Computer System வந்ததன் காரணமாக Single phase line ஆக இருப்பதை Three phase line ஆக செய்து கொடுத்தால், கம்ப்யூட்டர்கள் பழுதடையாமல் இருக்கும்.

எங்களுக்கு மட்டும் சொல்லவில்லை; மொத்தமாகச் சொல்கிறேன். தமிழகம் முழுவதுமே அதைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

எல்லா பள்ளிகளிலும் போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அங்கு ப்யூன் இல்லை. வாட்ச்மேன் இல்லை. எழுத்தர் இல்லாமல் இருக்கிறது. அதனால் Head Master அவர்களுடைய பணிகளைப் பார்க்கிறபோது, மற்ற வேலைகள் பாதிக்கப்படக்கூடியதாக இருக்கின்றன. பூட்டிவிட்டுச் சென்ற பிறகு, மறுபடியும் வந்து பார்த்தால் அங்கு தவறுகள் நடக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதையும் அரசு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குட்டியூர் என்கிற ஊரில் முதலில் ஆரம்பப் பள்ளி இருந்திருக்கிறது. அதையும் மூடிவிட்டார்கள். இப்போது புதிதாகப் பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இதை பலமுறை கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மயிலாவரம் என்ற இடத்தில் ஆரம்பப் பள்ளி இருக்கிறது. அதற்குக் கட்டடம் கேட்டிருக்கிறார்கள். கொடுக்கப்படாமல் உள்ளது. அதற்கும் முன்னுரிமை அளித்து கொடுக்க வேண்டும். அமராவதியில் ஆரம்பப் பள்ளி புதிதாக உயர்நிலைப் பள்ளியாக ஆக்கப்பட்டிருக்கிறது. அது P.W.D.-க்கு சம்பந்தப்பட்ட இடம். அதை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த இடத்தில் நபார்டு திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டுவதற்கு உரிய முறையிலே, துறைமூலமாக பரிசிலனை செய்து, அந்த இடத்தில் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே Three phase current கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரியிருப்பது மிக முக்கியமான ஒரு கோரிக்கை. பல முறை ஆய்வுகள் நடத்துகிறபோது இந்தக் கோரிக்கை அரசினுடைய கவனத்திற்குத் தொடர்ந்து எடுத்துச்சொல்லப்பட்டு, அந்தத் திட்டம்

2011 ஜனவரி 12]

அரசினுடைய ஆய்விலும், கருத்திலும் இருக்கிறது. வரக்கூடிய ஆண்டுகளிலே அதை நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சிக்கும். அதேபோல, Non–teaching Staff என்று சொல்லக்கூடிய அலுவலகப் பணியாளர்கள் பணியிடங்களை அதிக அளவிலே அங்கு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்திலே இந்த ஆண்டு முதல் அதை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதற்கு மத்திய அரசும் ஒப்புதலை வழங்கியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு முதல் அந்தத் திட்டத்தின் நிதி உதவியின்மூலமாக ஆசிரியர்கள் அல்லாத பணியாளர் பணியிடங்களை நிச்சயமாகத் தர முடியுமென்று நான் நம்புகிறேன். இடைக்கால ஏற்பாடாக, இதுவரை Out–sourcing முறையிலே அந்தப் பணியிடங்களை நிரப்பிக்கொள்வதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அஃதன்னியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய பல்வேறு பள்ளிகளிலே குறிப்பாக, அமராவதி பள்ளி, அதேபோல, அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய ஊரிலே இருக்கக்கூடிய துவக்கப் பள்ளிக்கும் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று அவர்கள் கோரியிருக்கிறார்கள். அரசு அவற்றைக் கவனத்திலே கொண்டு, வரக்கூடிய கல்வி ஆண்டுக்குள் நிச்சயமாக அவற்றை நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், கீழவெளியூர் நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தாலே பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது. மேலும் சமூக விரோதிகள் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, தோகைமலை ஒன்றியம், கீழவெளியூர் நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் எழுப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் நடுநிலைப் பள்ளிகள், துவக்கப் பள்ளிகளுக்கு, அரசு அனுமதி

பெற்று 2010–2011 ஆம் ஆண்டிலே சென்னை, கோவை, கன்னியாகுமரி, மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஏறத்தாழ 39 ஆயிரம் மீட்டர் அளவிற்கு ரூ.7.80 கோடி செலவிலே சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வரக்கூடிய கல்வி ஆண்டிலிருந்து, ஒவ்வொரு மாவட்டமாக, அனைவருக்கும் கல்வித் திட்டத்திலே அதற்காக அனுமதி வழங்குகிறார்கள். வரக்கூடிய ஆண்டிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி அமைந்திருக்கக்கூடிய கரூர் மாவட்டத்தையும் இணைத்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல உயர்நிலை, மேல்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் இல்லாததால் மிகப் பிரச்சினையாக இருக்கிறது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் செய்கின்ற பணிகளுக்கு அதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன, மற்ற இடங்களில் இந்த ஏற்பாடுகள் இல்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்தமாக அதற்கான ஒரு புதிய திட்டத்தை கல்வித் துறையின்மூலம் ஏற்படுத்தித் தருவாரா என்று கேட்கிற அதே வேளையில், என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள வெங்கடாம்பேட்டை உயர்நிலைப் பள்ளியை நடப்பு கல்வி ஆண்டிலாவது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து ஆவன செய்வார்களா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பள்ளிகள் அனைத்திற்கும் சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கை, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலிருந்தும் தொடர்ந்து இந்த அவையிலே வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. எனவேதான், நபார்டு வங்கியினுடைய உதவியை நாங்கள் கோரினோம். நபார்டு வங்கி

2011 ஜனவரி 12]

எட்டாவது திட்டத்தின்கீழ், பிறகு எடுத்துக்கொள்ளக்கூடிய பள்ளிகளை, வகுப்பறைகளுக்கு மாத்திரமல்லாமல், அந்தப் பள்ளிகளுக்கு வகுப்பறை கொடுக்கிறபோதே சுற்றுச்சுவரையும் இணைத்துக் கொடுக்கக்கூடிய முறைக்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், 1 முதல் 7 ஆம் வகுப்பு வரை இருக்கக்கூடிய பல்வேறு பள்ளிகள், ஏறத்தாழ 1,238 பள்ளிகள் விடுபட்டுப் போயிருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்கு ஏறத்தாழ 6 இலட்சத்து 22 ஆயிரத்து 307 மீட்டர் சுற்றளவிலே சுற்றுச்சுவர் அமைப்பதற்கு 113.91 கோடி ரூபாய் செலவிற்கான முன்மொழிவுகள் அரசிடமிருந்து இப்போது நபார்டு வங்கிக்குக் கொடுத்திருக்கிறோம். அவர்களுடைய ஒப்புதலை எதிர்நோக்கி காத்திருக்கிறோம், வந்தவுடன் அந்தப் பணிகள் செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெங்கடம்பேட்டை உயர்நிலைப் பள்ளிக்கு என்று சொல்லியிருக்கிறார்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பள்ளிகளுக்கு அறிவிக்கிறபட்சத்திலே நிச்சயமாக அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற ஆதமங்கலம்புதூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு இந்த ஆண்டு சுற்றுச்சுவர் கட்டித் தரப்படுமா? மேலும் அந்த அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு இந்த ஆண்டு தேர்வு மையம் வழங்கப்படுமா என்றும் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய பள்ளியிலே இந்த ஆண்டு நபார்டு வங்கியின்மூலமாக வகுப்பறைக் கட்டடங்கள் ஏதேனும் கட்ட எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை. அவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் நிச்சயமாக அந்தப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டுவதையும் சேர்த்து

[2011 ஜனவரி 12

எடுத்திருப்பார்கள். அப்படி இல்லையென்று சொன்னால் நான் அதிகாரிகளிடத்தில் சொல்லி வரக்கூடிய Phase –லே அந்தப் பள்ளியை இணைத்துக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறேன். அதைப்போல அங்கு இருக்கக்கூடிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு இந்த ஆண்டு தேர்வு மையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையையும் இந்த ஆண்டு நிச்சயமாக அரசு ஏற்றுக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் Home Science B.Sc., B.Ed., மற்றும் மனையியல் M.Sc., B.Ed., படித்த மாணவிகளுக்குப் பல ஆண்டு காலமாகப் பணி நியமனம் வழங்கப்படாமல் இருந்து வருகிறது. மனையியல் என்பது ஒரு அறிவியல் பாடமே. பல கல்லூரிகளில், B.Ed. கல்வி நிறுவனங்களில் இந்தப் பாடத் திட்டம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நமது கல்வித் துறை அதை அங்கீகரிக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சென்றிருக்கிறோம். அதைப் பரிசீலிப்பதாகக் கூறினார்கள். அதை இந்த ஆண்டு பரிசீலிப்பதற்கு முன்வருவார்களா என்பதோடு, ஏற்கெனவே இதேபோன்று தமிழகத்தில் தனியார் மருத்துவ நர்சிங் கல்லூரிகளில் படிக்கக்கூடிய பெண்களும் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆகவே, இது பெண்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இந்த அமைச்சருக்கு அது சம்பந்தமில்லை.

செல்வி கே. பாலபாரதி: இல்லை, இல்லை, அதுதான் சொல்லவருகிறேன். ஆகவே, அதுவும் நீதிமன்றத்தில் உள்ளது. பெண் கல்விக்கு ஒரு தடையாக இருக்கக்கூடிய பிரச்சினை மாதிரியாகவே இருக்கிறது. அதுபோன்று இந்த Home Science–ஐ படிக்கக்கூடிய மாணவிகளுக்கு உற்சாகப்படுத்தக்கூடிய, நம்பிக்கை தரக்கூடிய வகையில் அவர்களுக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இந்தத் துறை பரிசீலிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2011 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னிடத்தில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே அரசு அதை பரிசீலனை செய்தது. ஆனால் Home Science-ஐ அறிவியல் subject ஆக நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. Home Science is a different subject altogether. அதை நீங்கள் Science என்று எடுத்துக்கொண்டீர்கள் என்றால், Science என்றால் அதில் Chemistry, Physics, Biology என்கின்ற பிரிவுகள் இருக்கின்றன. அதிலே ஒரு பிரிவிலே ஏதாவது ஒரு major-ல் படித்திருந்தால்தான் நம்முடைய பள்ளிகளிலே உள்ள பாடத் திட்டத்திற்கு, +2-வில் எடுத்துக்கொண்டீர்கள் என்றால், அல்லது 10th-ஐ எடுத்துக்கொண்டீர்கள் என்றால் அதில் அறிவியல் பாடத் திட்டம் இருக்கிறது. அறிவியல் பாடத் திட்டத்திற்கு என்னென்ன subjects படித்திருக்க வேண்டுமோ அவர்கள்தான் teacher ஆக வரமுடியும். Home Science படித்தவர்கள் எல்லாம் அறிவியல் பட்டதாரிகள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது அவ்வளவு பொருத்தமுடையதாக இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திய கோரிக்கையானது அரசின் மட்டத்திலே பரிசீலிக்கப்பட்டு இப்போது ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீடிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

28—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***108414—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—